S7

# படிமுறை 7:
# பணியினைத் திட்டமிடல்: ஆ)இலக்குகளையும் துணை இலக்குகளையும் அமைத்தல்




ஒருவர் ஒரு பயணத்தைத் திட்டமிட்டால், அவர் முதலில் தான் சேருமிடம் எது என்றும் அதை அடைய எத்தனை படிநிலைகள் தேவை என்பதையும் முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். கற்றலும் சரியாக அது போலத்தான், உங்களுக்கு ஓர் இலக்கு வேண்டும். அந்த இலக்குக்குரிய வழியினை அடைய நீங்கள் தெரிவு செய்யும் வழிகளை துணை இலக்குகளாகப் பிரிக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு:

- பத்து நாட்களில் நீங்கள் சிங்கங்களைப் பற்றிய ஓர் எடுத்துரைப்பினை வழங்க வேண்டும். உங்கள் இலக்கு உண்மையில் ஒரு நல்ல எடுத்துரைப்பினை வழங்கி, நல்ல தரத்தினைப் பெறுவதாகும். இப்போது இந்த இலக்கை நீங்கள் அடுத்த சில நாட்களுக்காகப் பகுதி இலக்குகளாகப் பிரிக்கவேண்டும்.

| | |
|---|---|
| திங்கள் | நூலகத்தில் சிங்கங்கள் பற்றிய நூல்களைப் பெற்று பார்த்து, குறிப்புகள் எடுக்கவும். |
| செவ்வாய் | இணையத்தில் தேடல்செய்யவும். முக்கியமான இணையத் தொடர்புப் பக்கங்களை எழுதவும், குறிப்புகள் எடுக்கவும். |
| புதன் | குறிப்புக்களை ஆராய்ந்து பார்க்கவும். எடுத்துரைப்பின் முதல் கட்டமைப்புப் பற்றிய முதல் வடிவமைப்பை உருவாக்கவும். |
| வியாழன் | கட்டமைப்பின் வடிவமைப்புப் பற்றி தொடர்ந்து செயற்படுக. விடுபட்ட தகவல்களைப் பெறுக. |
| வெள்ளி | எடுத்துரைப்பின் முதல் மாதிரி வரைபை எழுதுக. |
| சனி ஞாயிறு | நீங்கள் உங்கள் எடுத்துரைப்பில் காட்ட விரும்பிய படங்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும். |
| திங்கள் | எடுத்துரைப்பை சில தடவைகள் மீள் படிப்புச் செய்து, வேண்டிய திருத்தங்களைச் செய்யவும். |
| செவ்வாய் | 2 தடவைகள் வீட்டில் படங்களைக் காண்பித்து எடுத்துரைப்பு வழங்குவதைப் பயிற்சி செய்யவும். நேரத்தைக் கணிக்கவும். |
| புதன் | எடுத்துரைப்பை 2 முதல் 3 தடவை வீட்டில் மனப்பாடமாக வழங்கிப் பயிற்சி செய்யவும். |
| வியாழன் | எடுத்துரைப்பைப் பள்ளியில் வழங்குக! |

- ஒவ்வொரு பெரிய ஒப்படையாயிலும், உங்கள் இலக்கு என்ன?, மற்றும் இந்த இலக்கினை அடையும் வழியினை துணை இலக்குகள் அல்லது படிமுறைகளாக நீங்கள் எவ்வாறு பிரிக்கப்போகிறீர்கள்? என்பதை எண்ணிப் பார்க்கவும்.
- ஒவ்வொரு நாளும், உங்கள் ஒப்படை நேரத்துக்கு முன்னர் இன்று உங்கள் இலக்குகள் மற்றும் துணை இலக்குகள் என்ன என்பதையும் எண்ணவும்.

குறிப்பு

ஒவ்வொரு நாளும் உங்கள் பாட நேரத்தொடக்கத்தில் ஒரு வேலைத் திட்டத்தை உருவாக்கவும். அதில் இன்று நிறைவேற்ற வேண்டிய பணிகள், இலக்குகள் மற்றும் துணை இலக்குகளையும் குறிக்கவும்.

## இலண்டனைப் பற்றிய ஒப்படைக்கான வேலைத்திட்டம்

| | திங் 5.3 | செவ் 6.3 | புதன் 7.3 | வியா 8.3 | வெள் 9.3 | சனி + ஞா 10.3 + 11.3 |
|---|---|---|---|---|---|---|
| கிழமை 1 | இலண்டனைப் பற்றிய நூல்களை நூலகத்தில் பெறுதல். | இலண்டனைப் பற்றிய தகவல்களை இணையத்தில் தேடி குறிப்பெடுத்தல். | குறிப்புகளை மீள நோக்கி கட்டமைப்பு மாதிரி வரைவை அமைத்தல் | கட்டமைப்பின் மாதிரி வரைவை தொடர்ந்து செய்தல். | விடுபட்ட தகவல்களைப் பெறுதல். | எடுத்துரைப்பின் முதல் மாதிரி வரைவை எழுதுதல் |

| | திங் 12.3 | செவ் 13.3 | புதன் 14.3 | வியா 15.3 | வெள் 16.3 | |
|---|---|---|---|---|---|---|
| கிழமை 2 | இலண்டன் பற்றிய படங்களைத் தேடுக. | எடுத்துரைப்பை முழுமையாக படித்து மீள் நோக்குச் செய்க. | வினாடி வினாக்கள் உருவாக்கல். | எடுத்துரைப்பை படங்களுடன் 2 தடவைகள் பயிற்சிசெய்து நேரத்தை அளவிடுக. | பள்ளியில் எடுத்துரைப்பை வழங்குக! | |

குறிப்பு

பெரிய வேலைகளை உங்கள் கிழமை அட்டவணையில் இப்பணியுடன் தொடர்பான துணை இலக்குகளையும் பதிவு செய்யவும்! மேலேயுள்ள எடுத்துக்காட்டுகள் எவ்வாறு எனக் காட்டுகின்றன.

### பயிற்சி 7

அடுத்த இரண்டு அல்லது மூன்று கிழமைகளில் நீங்கள் என்ன பெரிய வேலையினைச் செய்துமுடிக்க வேண்டும் என எண்ணிப்பார்க்கவும். துணைப் படிநிலைகள் மற்றும் துணை இலக்குகளைக் கொண்டு ஒரு திட்டம் (மேலே உள்ளது போன்று) உருவாக்கவும். உங்களுக்கு இந்நேரத்தில் வேறுவேலை இல்லை எனின், பின்வருமாறு கற்பனை பண்ணவும்: இரண்டு வாரங்களில் உங்களுக்கு மிகப்பிடித்த பொழுதுபோக்கு பற்றிய ஒரு எடுத்துரைப்புச் செய்ய வேண்டும். நீங்கள் எப்படி அதைத் தொடர்வீர்கள்? துணை இலக்குகளும் துணைப் படிமுறைகளும் உள்ள ஒரு திட்டத்தினை ஆக்குக!

